**DEPOSITION OF WITNESS**

**In the Court of the District Munsif Cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC . 11 /2019.** | | |
| **PW/DW/CW** | : | **PW1** | | |
| **Name** | : ரத்தினம் | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : சக்தி | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

(Accused absent u/s.317 CrPC petition filed and allowed)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 18.05.2023

---

**முதல் விசாரணை:**

1. நான் குளத்துப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். சாட்சி ஜோதிலட்சுமி எனது மகள். விபத்தில் இறந்துபோனவர் எனது அப்பா பாண்டி ஆவார். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் விபத்து நடந்தது. அன்றையதினம் இரவு சுமார் 07:30 மணியளவில் எனது அப்பாவும் எனது மகளும் என்னை வேலைக்கு செல்வதற்காக பேருந்தில் ஏற்றிவிட வந்தார்கள். அப்போது எனது வீட்டின்முன்புள்ள பேருந்து நிறுத்தத்தில் தெற்கு பக்கம் பாத்ரூம் சென்ற எனது அப்பா ரோட்டை கடந்து வடக்கு பக்கம் ரோட்டின் ஓரமாக வந்துவிட்டார்.

2. வடக்கு பக்கமாக ரோட்டின் ஓரமாக நின்றவர் மீது தேனியில் இருந்து வந்த வெள்ளை நிற பெரிய கார் வேகமாக வந்து எனது அப்பாவின் மீது மோதி நிற்காமல் சென்றுவிட்டது. மோதியதில் எனது அப்பா மேலே சென்று கீழே விழுந்துவிட்டார். சத்தம்கேட்டு பக்கத்தில் இருந்த எனது சித்தப்பா பெருமாள், பெரியப்பா பாண்டி, ஜெயராமன் ஆகியோர் ஓடிவந்துவிட்டார்கள். ஆம்புலன்சிற்கு போன் செய்து வரவில்லை ஆதலால் நாங்கள் எனது அப்பாவை ஆட்டோவில் வைத்து உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கிருந்து மதுரைக்கு கொண்டு செல்ல சொன்னதன்பேரில் அங்கு கொண்டு சென்றோம். ஆனால் சிகிச்சை பலனின்றி எனது அப்பா மறுநாள் மாலை இறந்துவிட்டார்.

விபத்து நடந்த அன்று இரவு சுமார் 10:00 மணியளவில் போலீசார் என்னிடம் புகார்மனு வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கைரேகை என்னுடையது தான். **(அந்த புகார்மனு அசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** அன்றையதினம் நான் பதட்டத்தில் நான் விபத்து ஏற்படுத்திய கார் நிற்காமல் சென்றதால் ஓட்டுநரை பார்க்கமுடியவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

**3.** எனது அப்பாவிற்கு 60 வயது இருக்கும். குளத்துப்பட்டி குஞ்சாம்பட்டிக்கு அடுத்து உள்ளது என்றால் மெயின்ரோட்டிலேயே உள்ளது. எங்கள் ஊருக்கு அருகே சாலை வளைவாக உள்ளது என்றால் சரிதான். தெற்கிலிருந்து வடக்காகவோ, வடக்கிலிருந்து தெற்காகவோ செல்லும்போது அந்த வளைவில் வரும் வாகனங்கள் தெரியாது என்றால் சரிதான், அன்றையதினம் அந்த வழியாக வந்த வாகனம் ஒலி எதுவும் எழுப்பவில்லை. பூச்சிப்பட்டிஊருக்குள் பெரிய வேகத்தடை உள்ளது என்றால் சரிதான், எங்கள் ஊரில் வேகத்தடை இல்லை. நான் வடக்குபக்கமாக நின்று கொண்டு இருந்தேன், எனது அப்பா சாலையை கடந்து வந்தார், எனது அப்பா மெதுவாக நடப்பார் என்றால் சரியல்ல, வேகமாக நடப்பார். எனக்கு எழுதபடிக்க தெரியாது என்றால் சரிதான். புகாரில் என்ன எழுதியிருக்கிறது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது மகள் அன்றையதினம் என்னுடன் வரவில்லை என்றால் சரியல்ல, என்னுடன் தான் வந்து நின்றுகொண்டு இருந்தார். நான் சொல்வது போல் விபத்து எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எனது அப்பாவின் இறப்பிற்காக வழக்கு தாக்கல் செய்து இழப்பீடு பெற்றுவிட்டோம். நடக்காத சம்பவத்திற்காகவும் இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காகவும் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்ற்ால் சரியல்ல. எதிரிக்கும் சம்பவத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

S.d./ Rathinam

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.